Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 349

வெள்ளிக்கிழமை 10 நவம்பர் 2023

ஐப்பசி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### மருத்துவர்கள் இல்லை

## 168 மருத்துவமனைகள் மூடப்படும் நிலையில்!

### வடக்கு, கிழக்கில் இன்னும் அபாயம்

**கொழும்பு, நவம்பர் 10**

**நாடெங்கிலும் 168 மருத்துவமனைகள் மூடப்படும் அபாய நிலையில் இருக்கின்றன. சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், நிபுணத்துவம் அற்ற மருத்துவர்களால் சேவைகள் முன்னெடுக்கப்படும் நிலை தோற்றம்பெற்றுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுப் பகிரங்க எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

»11

## கிரிக்கெட் சபை கூண்டோடு 'அவுட்'

### தீர்மானம் நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 10

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உள்ளிட்ட நிர்வாகசபையை நீக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் அரச தரப்பின்

»11

## இலங்கை கிரிக்கெட் அணியை ஐ.சி.சி. தடைசெய்ய வாய்ப்பு?

### காஞ்சன இருமனம்



கொழும்பு, நவ. 10

இலங்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் பிரேரணைகளால், குற்றச்சாட்டுகளால் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை அணியைத் தடைசெய்ய வாய்ப்புள்ளது என்று

»11

### இடைக்காலத் தடை

## நீதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை!

### எதிர்க்கட்சி விடாப்பிடி

கொழும்பு, நவ. 10

விளையாட்டுதுறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட சிறிலங்கா கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிராக, இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசருக்கு எதிராக

»11

## மயங்கி வீழ்ந்த பெண் மரணம்

### நலன்புரிக் கொடுப்பனவை பெறச்சென்றபோது சோகம்

வடமராட்சி, நவ. 10

வடமராட்சி - பருத்தித்துறையில் நலன்புரித்திட்டப் பணத்தொகையைப் பெறுவதற்காகச் சென்ற குடும்பப் பெண்ணொருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

»11

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்றுங்கள்

### அமைச்சர் ரொஷானுக்கு சஜித் பிரேமதாஸ அழைப்பு



கொழும்பு, நவ. 10

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணிக்குமாறும் பணியாற்றுமாறும் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

'ஊழல் மிக்க சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்' எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றி

»11

## பெண்ணொருவர் கொலை; குற்றவாளிக்குத் தூக்கு!

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி - பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவரைக் கொலைசெய்த குற்றவாளிக்கு ஒன்பது வருடங்களின் பின்னர், கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது.

»11

### அல்வாயில் -

## மூதாட்டியின் இறப்பு திட்டமிட்ட கொலையே!

### காட்டிக்கொடுத்தது பகுப்பாய்வு அறிக்கை

### இரு பெண்கள் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 10

அல்வாயில் மூதாட்டியொருவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்த நிலையில், அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்

»11

### சட்டத்தரணி விவகாரம்;

## மாணவர்களின் போராட்டத்துக்கு பணிந்தது பல்கலை ஆசிரியர் சங்கம்

### சர்ச்சைக்குரிய அறிக்கையும் வாபஸ்

யாழ்ப்பாணம், நவ. 10

சட்டத்தரணி சுவஸ்திகாவை மீண்டும் அழைத்து, அவர் மாணவர்கள் மத்தியில் விரிவுரையாற்ற அனுமதிக்கவேண்டும் என்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கை மாணவர்களின் போராட்டத்தையடுத்துத் திரும்பப் பெறப்பட்டது. கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றில் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் கலந்துகொண்டு, 'நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின்

»11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு!

வவுனியா, நவ. 10

நெடுங்கேணி, முல்லைத்தீவு பிரதான வீதி தண்டுவான் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை பின்னிரவு நடந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நெடுங்கேணி - ஒலுமடுவைச் சேர்ந்த நா. கரன் (வயது-33) என்பவர் உயிரிழந்துள்ளார். (ஒ-75)

# பாதீட்டை முன்னிட்டு சபையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு!



## முழு நாடாளுமன்றமும் இன்று சல்லடை

கொழும்பு, நவ. 10

**2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில், இன்று முதல் நாடாளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.**

'நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட உரை முன்வைக்கப்படவிருப்பதை முன்னிட்டு கடந்த வருடங்களைப் போன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கமைய, இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள், ஆடை அலுமாரிகள் உட்பட நாடாளுமன்றத்தின் முழு கட்டடமும் பாதுகாப்புச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படும் எனவும் சபாநாயகர் கூறினார்.

அதேவேளை வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும், 13ஆம் திகதி பொதுமக்கள் கலரி வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருக்கும்.

நாடாளுமன்ற வாகனத் தரிப்பிடம் அன்றையதினம் மூடப்பட்டிருப்பதுடன், உறுப்பினர்கள் வருகை தரும் வாகனங்கள் உரிய தரிப்பிடத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. அன்றையதினம் நாடாளுமன்றத்துக்கு வருகைதரும் உறுப்பினர்கள் முடிந்தளவு தமது சாரதிகளுடன் வருமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வாகனத்தை தாமே செலுத்தி வந்தால் அவற்றை வாகனத் தரிப்பிடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு உறுப்பினர்களின் நுழைவாயிலுக்கு அருகில் நாடாளுமன்றப் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் தனது அறிவிப்பில் தெரிவித்தார்.

அத்துடன், அன்றையதினம் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார். (ஒ-44)

# சமர்ப்பிக்கப்படும் பாதீடே ரணிலின் கடைசிப் பாதீடு

## *மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும். ஜனாதிபதி ரணிலின் கடைசிப் பாதீடாக இதுதான் அமையப்போகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்று உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆளுங்கட்சிக்குள் இன்று மோதல் வெடித்துள்ளது. மக்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதில்லை. அதனால்தான் தொடர்ச்சியாக பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுவருகின்றன. அதிகாரம் பற்றியே அவர்கள் சிந்திக்கின்றனர். அதனாலேயே மக்கள் ஆணை இல்லாத இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என்று ஆரம்பத்திலேயே நாம் வலியுறுத்தினோம். தற்போது தேர்தலை நடத்தினால் மக்களின் உண்மையான நிலைப்பாடு என்னவென்பது தெரியவரும்.

பாதீட்டுக்கு முன்னதாக விதிக்கப்பட வேண்டிய வரிகள் எல்லாம் விதிக்கப்பட்டுவிட்டன. விற்கப்பட வேண்டிய விடயங்கள் எல்லாம் விற்கப்பட்டுவிட்டன. இவ்வாறு செய்துவிட்டு அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கி ஏமாற்றுவித்தையை அரங்கேற்ற முயற்சிக்கின்றனர். இப்படியான கதைகள் மக்கள் மத்தியில் இனியும் எடுபடாது.

இதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடைசி பாதீடாக அமையப்போகின்றது. பாதீட்டுடன் அரசுக்குள் மோதல் வலுபெறும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியில் ஜனாதிபதிக்கு இடமில்லை. எமது தரப்பிலும் இடமில்லை. எனவே, நாடாளுமன்றத்தை உடன் கலைக்குமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-44)

# பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு 100 ஆவது நாள் மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி - பொன்னாவெளி பகுதியில் சிமெந்து தொழிற்சாலை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக அப்பகுதி மக்கள் முன்னெடுத்துவரும் எதிர்ப்பு போராட்டத்தின் 100ஆவது நாள் இன்றாகும். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அறிவிப்பு விடுத்துள்ளார்.

வேரவில் மருத்துவமனை முன்பாக இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு போராட்டம் இடம்பெறவுள்ளது. (ஒ-100)

# ஆள்கள் இல்லாத வீட்டில்

## பெறுமதியான பொருள்கள் திருட்டு

பளை, நவ. 10

வீட்டுக்காரர் கிளினிக்குக்காக யாழ்ப்பாணம் சென்றிருந்தவேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பளை இந்திராபுரத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கிளினிக்குக்காக வீட்டுக்காரர் கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்று மறுநாள் கிளினிக்கை முடித்து யாழ்ப்பாணத்தில் ஒருநாள் தங்கிவிட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார்.

வீட்டின் கதவுகள் திறந்த நிலையில் இருந்தன. உள்ளே சென்று பார்த்தபோது கடந்த வருடம் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த பொதி செய்யப்பட்டிருந்த மின் மோட்டர் மற்றும் பாவனையில் இருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றுடன் அங்கு காணப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களும் திருடப்பட்டுள்ளன. (ஒ-9)

# அமைச்சர் டக்ளஸ் சொல்வதெல்லாம் பொய்

யாழ்ப்பாணம், நவ. 10

புதிய கடற்றொழில் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் முன்வைத்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்துகள் அனைத்தும் பொய். பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் கேள்வியொன்றை எழுப்பியபோது அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ், தென்னிலங்கை மீனவர்களால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து தனக்குத் தெரியாது என்றும், அப்படி இடம்பெற்றால் அது தொடர்பாக அறியத்தாருங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பதைப் போன்று அமைச்சரும் கண்ணை மூடிக் கொண்டே பால் குடிக்கிறார். அவர் பேசுவதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான் சொல்வதைத் தான் செய்வேன். செய்வதைத் தான் சொல்லுவேன் என சொல்லும் அமைச்சர், தென்னிலங்கை மீனவர்களது விவகாரம் தொடர்பில் எதுவும் தெரியாது எனக் கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

குடாரப்பு, மாமுனை போன்ற இடங்களில் போய்ப் பார்த்தால் தெரியும். அங்கு புத்தளம், கற்பிட்டி, மன்னாரைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட படகுகளில் அட்டை தொழில் செய்து வருகின்றனர். இவ்வளவு பெரும் செயற்பாடு இடம்பெற்று வருகையில் அது தொடர்பில் எதுவுமே நடக்காது போன்று அமைச்சர் பதிலளித்திருப்பது ஏமாற்று நாடகமே.

கடற்றொழில் அமைச்சரோ, கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளரோ அனுமதி கொடுக்காமல் தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்து அவர்களால் எவ்வாறு தொழிலில் ஈடுபட முடியும்? தென்னலங்கை மீனவர்களுக்கு அனுமதியைக் கொடுத்து அனுப்பிவிட்டு தங்களுக்கு எதுவும் தெரியாது என்பதாகக் கூறுவது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் - என்றார். (ஒ-27)

# மாற்றுத்திறனாளிகளுக்கு சுற்றுலா ஊக்கப்படுத்தல்

மாற்றுத்திறனாளிகளை சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுத்தும் ஊக்குவிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் அனுபா பஸ்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

டிசெம்பர் 3 ஆம் திகதி மாற்றுத்திறனாளிகள் தினமாக ஐ.நா. பிரகடனப்படுத்தியுள்ளது.

அவர்களுக்கான சுற்றுலாப்பயணங்களை ஊக்குவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

அதற்கமைய உள்நாட்டு, வெளிநாட்டு மாற்றுத்திறனாளிகளான 100 உல்லாசப்பயணிகளை விசேட ரயில் மூலம் கொழும்பிலிருந்து கண்டிக்கு அழைத்துச் சென்று தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் பேராதனை தாவரவியற்பூங்காவுக்கு அழைத்துச்செல்லவும் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொள்ளையர்களை பாதுகாக்க மாட்டோம்

## சஜித் முழக்கம்

கொழும்பு, நவ. 10

**நாம் கள்வர்களைப் பாதுகாக்கமாட்டோம். எமது நாட்டில் கொள்ளையடித்த கொள்ளையர்களை நிச்சயம் கைது செய்வோம். அதுமட்டுமல்ல கொள்ளையடிக்கப்பட்ட பணத்தையும் நிச்சயம் எமது நாட்டுக்குக் கொண்டுவருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

'ஊழல்மிக்க சிறிலங்கா கிரிக்கட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்' எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து முன்வைத்த பிரேரணை மீதான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைக் கிரிக்கெட்டின் சமகால மற்றும் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என பிரிந்து நிற்காமல் அனைவரும் ஒன்றுபடவேண்டும். கிரிக்கெட் நிர்வாகம் நினைப்பதுபோல், ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் இருவேறு கருத்துகளில் இருந்தாலும், இந்த விவகாரத்தில் ஒரேகருத்து நிலைப்பாட்டில் இருப்பதால், கிரிக்கெட் சபையினருக்கு சுயமரியாதை இருப்பின் இன்றே கிரிக்கெட் சபையிலிருந்து தாமாகவே சுய விருப்பில் வெளியேறவேண்டும்.

ஊழல் நிறைந்த கிரிக்கெட் நிர்வாகம் வெளியேறி, கிரிக்கெட்டின் எதிர்காலத் திட்டத்துக்குத் தெளிவான முறையான வேலைத்திட்டம் அவசியம். கிரிக்கெட்டில் பிரயோகிக்கப்படும் அரசியல் செல்வாக்கை நீக்கி, நட்புவட்டாரக் கும்பல், குண்டர்கள், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாலியல் குற்றவாளிகளை நீக்கி, முறையான பாதையை நோக்கிச் செல்ல வேண்டும். கிரிக்கெட் என்பது நீல, பச்சை, சிவப்பு என்பதற்குகப்பால் 220 இலட்சம் இலங்கையருக்குச் சொந்தமானது. அதனை நாம் பாதுகாக்கவேண்டும். இந்தத் தீர்மானம் நிறைவேறினால் கிரிக்கெட் சபை பதவி விலகுமா எனத் தெரியவில்லை. ஆனால், நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் இந்த விடயத்தில் இணைந்தால் நிச்சயம் மாற்றம் வரும் - என்றார். (ஒ-44)

# வளவாளர்களுக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ. 10

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்டுவரும் 2024ஆம் ஆண்டுக்கான கலை, மொழித்திறன் சார் வகுப்புகளை நடத்துவதற்கு தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தால் தகுதிவாய்ந்த வளவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரங்கள், தகைமைகள், தொலைபேசி ஆகியன அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்பதாக நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தென்மராட்சி, குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று தென்மராட்சி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு பிரதேச கலாசார மத்திய நிலையங்களினூடாக இசை, நடனம், சித்திரம், நாடகம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சிநெறிகளை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழக மீனவர்கள் 38 பேர் விடுதலை!

மன்னார், நவ. 10

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் 38 பேரையும் விடுவித்து மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இருவேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டிருந்த 38 தமிழ்நாடு மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 38 மீனவர்களையும் நிபந்தனைகளுடன் விடுவித்து மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-100)

# அறிவிப்புகளை விடுக்காது பதவி விலகவேண்டுமாம்!

## மேர்வின் கூறுகின்றார்

கொழும்பு, நவ.10

அறிவிப்புகளை விடுத்துக்கொண்டிருக்காமல் அமைச்சரவையில் இருந்து ரொஷான் ரணசிங்க உடன் வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரான மேர்வின் சில்வா.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

நானும் அமைச்சரவையில் இருந்துள்ளேன். ஏதாவது செய்வதாக இருந்தால் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிவிட்டு செயற்பட்டிருக்கவேண்டும். மரக்கறிச் சந்தையில் செயற்படுவதுபோல் அமைச்சரவையில் செயற்படமுடியாது.

தமது வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சருக்கு இடமளிக்கப்படாவிட்டால், அமைச்சரவையில் இருந்து அமைச்சர் ரொஷான் ரணசிங்க வெளியேறவேண்டும். அறிவிப்புகளை விடுத்துக்கொண்டிருக்காமல் இன்றே வெளியேறவேண்டும். நான் ராஜபக்சக்களுக்கு அடிபணியவில்லை, துணிவுடன் முடிவெடுத்தேன்.

அதேவேளை, உரியநேரத்தில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கவேண்டும். அவ்வாறு இறங்கிவிட்டு ஆட்சியாளர்களை என்னிடம் ஒப்படையுங்கள். அவர்களை நான் கவனித்துக்கொள்கின்றேன் - என்றார். (எ-44)



# புதினம் தெரியுமோ?

ஏதையும் பிளான் பண்ணிச் செய்யோணும். இல்லாட்டி நேற்று கம்பஸில இருக்கிற ஒரு ஆசிரிய அமைப்பு அவமானப்பட்ட மாதிரியான நிலைதான் வந்திடும். கம்பஸில இருக்கிற ஆசிரிய சங்கம் முந்தநாள் ஒரேநேரத்தில ரெண்டு அறிக்கை விட்டது. வழக்கமா ஏதும் ஒரு அமைப்பு ஒரு மாதத்துக்கு ஒரு அறிக்கை விடுறதே அபூர்வமாப்போன இந்தக் காலத்தில, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மட்டும் சுகப்பிரசவத்தில ரட்டை அறிக்கைகளை அடிச்சு விட்டிருக்கு. ஒண்டு, மயிலத்தமடு பிரச்சினை பற்றினது. இன்னொண்டு, யாழ்ப்பாணம் கம்பஸுக்கு வந்த பெண் லோயர் ஒராளைத் திருப்பி அனுப்பினதுக்கு கண்டனம். இப்பிடி அவை ரண்டு அறிக்கையளை அனுப்பினதுக்கும் காரணம் இருக்கு. அந்தப் பெண் லோயரை கம்பஸுக்கு கூட்டிகொண்டந்து, அவாக்கு இன்னும் 'காத்தடிச்சு' விடுறதுக்கு ஏற்பாடு பண்ணின ஒராள்தான், ஆசிரியர் சங்கத்தில உள்ள ரண்டுபேருக்கு ஆய்க்கினை குடுத்து இப்பிடி ஒரு கண்டன அறிக்கையை விடப்பண்ணினதாம். ஆனால் ஒரு சிக்கல். பெண் லோயர் வந்து திரும்பிப்போய் ஒரு கிழமையாகிட்டுது. அதுக்குக் கண்டனம் விடோணும் எண்டா உடன விட்டிருக்கவேணும். இப்பிடி ஆற அமர யோசிச்சுப் போட்டு அறிக்கை விட்டால் அதுக்குப் பின்னால ஏதோ அரசியல் இருக்கெண்டு எல்லாருக்கும் தெரிஞ்சு போடும்.

அதால அந்த ஆசிரியர் சங்கத்தின்ர முக்கியமான ரண்டுபேரும், மயிலத்தமடுப் பிரச்சினை சம்பந்தமாவும் அறிக்கை விட்டால் அதுவும் இதுவும் சமனாப் போடும் எண்டு கணக்குப் போட்டுத்தான், ஒரேயடியா ரண்டு அறிக்கையையும் விட்டவை. ஆனால் உதுகளையெல்லாம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு கம்பஸ் பெடியளொண்டும் சின்னத்தவ்வல்கள் இல்லைத்தானே. ஒண்டிரண்டு மீடியாக்களில உந்த அறிக்கை வந்ததால, உதைப் பற்றி அந்த ஆசிரியர் சங்கத்தில இருக்கிற, தாங்களுக்குத் தெரிஞ்ச சில லெக்சர்மாரிட்ட 'இப்பிடி ஒரு அறிக்கையை ஏன் இப்ப விட்டனீங்கள்?' எண்டு நட்புரீதியாக் கேட்டிருக்கினம். ஆனால் அதுக்கு அவை சொன்ன பதிலைக் கேட்ட கம்பஸ் பெடியளுக்கு அழுகிறதா, சிரிக்கிறதா எண்டு தெரியேலை. ஏனெண்டால் அப்பிடி ரண்டு அறிக்கைகள் தங்கட சங்கத்தின்ர பேர்ல வந்ததே அவையளில கன பேருக்குத் தெரியேலையாம். அந்தச் சங்கத்தில இருக்கிற ரண்டுபேர்தான் காதும் காதும் வைச்சமாதிரி இப்பிடி ஆருக்கும் தெரியாமல் அறிக்கையளை அடிச்சு விட்டிருக்கினம். இப்பிடி தன்னிச்சையா ஒரு சங்கத்தின்ர பேரைப் பாவிச்சு, ஆரோ சொன்னதைக் கேட்டு அறிக்கை விட்டு இல்லாத குழப்பங்களை உருவாக்கினவைக்கு எதிரா கம்பஸ் பெடியள் வாசல் 'கேற்றுகளை' பூட்டி போராட வெளிக்கிட்டாங்கள்.

அறிக்கை விட்டவையில ஒராள் இந்தப் போராட்டத்தை நோட்டம் விட்டுப்போட்டு 'பத்துப் பதினைஞ்சு பேர் தான் போராடுறீங்கள். மிச்சப்பேர் எல்லாம் எங்களுக்கு ஆதரவு' எண்டு நக்கலாச் சொல்லிப்போட்டு அங்கால போறதுக்கிடையில, ஈசல் மாதிரி பெடியள் எல்லாம் திரண்டு வந்திட்டாங்கள். சும்மாயிருந்த பெடியளை உசுப்பிவிட்டால் வில்லங்கம் தானே வரும். இனியும் விட்டால் பிரச்சினை பெரிசாப் போடுமெண்டு அறிக்கை விட்டவைக்கு விளங்கிட்டுது. 'அந்த அறிக்கையை வாபஸ் வாங்கிறம்' எண்டு பின்வாங்கிப் போட்டினம். இப்ப தங்களுக்குத் தெரியாமல் எப்பிடி இவை அறிக்கை விட்டவையெண்டு அந்த ஆசிரியர் சங்கத்தில உறுப்பினரா இருக்கிறவை எல்லாம் கொந்தளிச்சுப் போய் இருக்கினமாம். அநேகமா இன்னும் கொஞ்சநாளில இந்த நிர்வாகத்தைக் கலைச்சுப் போட்டு புது நிர்வாகம் வரப்போறது உறுதியாகிட்டுது. ஒரு அறிக்கையால எல்லாமே தலைகீழாப் போட்டுது பாருங்கோ!



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் கன மழையால் 7 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மழையால் இதுவரை ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ள தாகவும் யாழ்ப்பாண மாவட்ட இடர் முகா மைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பொலிகண்டி கிழக்குப் பகுதியிலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு இதுவரைக்கும் 836.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள் ளதுடன், நேற்றுமுன்தினம் இரவு 8.11 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-27)

## என்.வி. கியூ. கற்கை சான்றிதழ் வழங்கல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யின் தொழிற்கல்வியை நிறைவுசெய்த பயிலுநர்களுக்கான என்.வி.கியூ. சான் றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நடைபெறவுள்ளது. பலது றைகளில் தொழிற்பயிற்சிகளை முடித்த 500 பேர் இந்தக் கற்கைச்சான்றிதழைப் பெறவுள்ளனர் என்று இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ச)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் முத்து அரங்கில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் கு.லங்காபிரதீபன் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிறட்லி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள் ளார். சிறப்பு விருந்தினராக மத்திய கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை கள் கிளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.மணிமார்பன் கலந்துகொள்ளவுள் ளார். கௌரவ விருந்தினராக கொழும்பு கல்வி வலயத்தில் முன்னாள் ஆசிரிய ஆலோசகர் கௌரி இரத்தினவேல் கலந் துகொள்ளவுள்ளார். நினைவுப் பேரு ரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி இ.ஈஸ்வரன் ஆற்றவுள்ளார். (ம)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 02.07.1947 — மறைவு 11.10.2023

கடந்த (11.10.2023) புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

**சின்னையா திருச்செல்வம்**

(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய. மட்டுவில் மகா வித்தியாலயம்)

திதி: தேய்பிறை திரயோதசி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (10.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதியபோசன நிகழ்வு நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்த நெஞ்சங்களுக்கும். நேரில். தொலைபேசி. சமூக ஊடகங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும். இறுதிக்கிரியையில் கலந்துகொண் டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி. (cs.52790) (N.1) — மனைவி மக்களும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 04 . 1937 — மறைவு 08 . 11 . 2023

**சரவணமுத்து சிவலோகநாதன் (சிவா)**

(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்து சபை சாலை பரிசோதகர் கோண்டாவில். பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

உடையார் ஒழுங்கை கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும். கந்த ரோடை மற்றும் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவலோகநாதன் 08.11.2023 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருகமனும். லோகேஸ்வரியின் (சின்னக்கிளி) பாசமிகு கணவரும். சுகன்யா (சுதா - பிரான்ஸ்). சிவகுமார் (பிரான்ஸ்). சிவபாலன் (பாலன் - யாழ். மாநகர சபை). குகப்பிரியா (பிரியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். சரவணபவன் (பிரான்ஸ்). பாரதி (பிரான்ஸ்). சாந்தநாயகி. திலீபநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும். ஸ்ரீபன். சதிஸ் - பிரியா. சில்வன் சந்துரு. சஞ்சீவ் சுந்தர் ஹறிஸ். பாணு. சரண். சிவரூபன். கௌதமன். ஜனுக்ஷன். லூட்சிகா. சுவிந்தன். இந்துஜன் ஆகியோரின் பேரனும். அயனின் பூட்டனும். பரமேஸ்வரியின் சகோதரனும். காலஞ்சென்ற வர்களான கௌரி. லோகேந்திராசா. அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

185/4. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

சுகன்யா - +3362 656 3738
சிவகுமார் - +3362 582 3686
சிவபாலன் - 077 645 2239
குகப்பிரியா- +3376 949 1537

(cr 40971) (N.1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.10.2023 வியாழக்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் சிவசோதி சாம்பசிவம் (பெரியக்கா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும்** அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர். (cs.52366) (AK.1) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 02 . 1933 — இறப்பு 09 . 11 . 2023

**திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம்**

தாவடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம் நேற்று (09.11.2023) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் க.சி. வல்லிபுரம் நாகரத்தினம் வல்லிபுரம் தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற சண்முகரத்தினம் (அவுஸ்திரேலியா). காலஞ்சென்ற கிருபாலரத்தினம். கமலேஸ்வரி மற்றும் ஜெயரத்தினம் (இந்தியா) ஆகியோரின் சகோதரியும். காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணி பொன்னையா நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், நிர்மலா (கனடா). மஞ்சுளா (கனடா). சியாமளா (ஐக்கிய அமெரிக்கா). இந்திரகுமார் (கனடா). செந்தில்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். த.கேந்திரராஜா (பொறியிய லாளர். கனடா). ஐ.சிவபாலன் (பொறியியலாளர். கனடா). மகேஸ்வரநாதன் (பேராசிரியர் ஐக்கிய அமெரிக்கா). நந்தினி (கனடா). மலர்விழி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும். சிவசங்கர். றஜீவன். பிரியதர்சினி. Dr. குஷியந்தினி. மயூரன். Dr.மிதுனன். Dr.நிருபன். சிந்துஜா. கோபிகன். அபிநயா. மஞ்சயன். மாதங்கி ஆகியோரின் பேர்த்தியும். நதீஷ். ஆகாஷ். ஜெயன். கல்யான். ஆரன். மீலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.11. இராசவல்லி ஒழுங்கையில் இன்று (10.11.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் கல்கிசை Mount Lavinia மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இல.11, இராசவள்ளி ஒழுங்கை,
Hampden Lane, வெள்ளவத்தை.
தொடர்பு: 076 312 9489
074 183 4089

தகவல்:
கே.நிர்மலா (கனடா)
சி.மஞ்சுளா (கனடா)
ம.சியாமளா (ஐக்கிய அமெரிக்கா)
ந.இந்திரகுமார் (கனடா),
ந.செந்தில்குமார் (ஐக்கிய அமெரிக்கா)

(CS 26892) A-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உங்களைத் திருத்துங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 3ஆம் திகதி வெலிமடை புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில் உலகின் போக்குத் தொடர்பில் ஒரு விடயத்தை ஆழமாக விசனித்திருந்தார். 'மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இலங்கை மற்றும் காஸா பகுதி தொடர்பில் இந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுகிறது? தூய்மையான கரங்களுடன் உலகளாவிய தேவைகளை முன்னெடுக்கவேண்டியது அவசியம். அவ்வாறு இல்லையெனில் இலங்கை அதற்குப் பதிலளிக்கவேண்டுமா?' என்றும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

மேற்குலக நாடுகள் எப்போதும் இரட்டை அணுகுமுறைக் கொள்கையையே இலங்கை விடயத்தில் கைக்கொள்கின்றன. தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தருவதற்காக அவர்கள் குரல் எழுப்பவில்லை மாறாக தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே தமிழர் விவகாரங்களை மேற்கின் ஆட்சியாளர்கள் கையாள்கின்றார்கள். இதனால் தமிழர்களுக்கு ஒருபோதும் நீதி கிட்டவும் போவதில்லை, மேற்குநாடுகள் அந்த நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் விடமாட்டார்கள் என்பதைத் தமிழ்த் தரப்புகள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகின் இரட்டை நிலைப்பாடு தொடர்பில் கடுமையாக விசனிக்கின்றார். இவ்வாறான இரட்டை நிலைப்பாட்டுப் போக்குக்கு இலங்கை பதிலளிக்கவேண்டுமா என்று மக்களிடம் கேள்வியை முன்வைக்கின்றார். ஜனாதிபதியின் கேள்வி எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். இலங்கை என்ற இந்தச் சிறிய தீவில் தமிழ் மக்கள் என்ற ஓர் இனக் குழுமமும் வாழ்ந்து வருகின்றது, அந்த இனக் குழுமத்தின் மீது எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகிய சிங்கள – பௌத்தர்களும் அந்தச் சித்தாந்தத்தின்படி ஒழுகும் இலங்கை ஆட்சியாளர்களும் எப்படி நடந்து கொண்டார்கள்? எப்படி நடந்துகொள்கின்றார்கள் என்பதை ஜனாதிபதி சுயபரிசோதனை செய்துகொண்டாரா? இந்தச் சிறிய தீவில் தமிழ் மக்கள் மீது காட்டப்படும் பாகுபாடுகள், நடைமுறைப் பிரயோகத்தின்போதான இரட்டை நிலைப்பாடுகள் தொடர்பில் பட்டியல்படுத்தினால் அது அனுமார் வால்போல நீண்டு சென்றுகொண்டேயிருக்கும் என்பதால், ஆகப்பிந்திய ஓர் உதாரணத்தை மாத்திரம் இங்கு முன்வைக்கலாம்.

மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் சிங்களவர்கள் அத்துமீறி குடியேறியிருக்கின்றார்கள். அவர்களை வெளியேறச் சொல்லி தமிழர்கள் அறவழியில் போராடுகின்றார்கள். அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தை அறவழியில் நடத்தினார்கள். போராட்டம் நடத்தி முடித்து திரும்பும் வழியில் அவர்களை சிறிலங்கா பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றம் பிணை வழங்கியும் வெளியே வரமுடியாதவாறு சிறையில் ஒருநாள் பொலிஸார் அடைத்துவிட்டனர். ஆனால், அதே இடத்தில், அம்பிட்டிய சுமண தேரர் பல டசின் கணக்கானோருடன் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து பொலிஸாரை நோக்கி அசிங்கமான சொற்களை வீசி போராட்டம் நடத்துகின்றார். அடாத்தாகப் புத்தர் சிலை வைக்கின்றார். போதாக் குறைக்கு தமிழர்களை வெட்டுவேன், கொல்லுவேன் என்கிறார். சிறிலங்கா பொலிஸார் அந்த அடாவடிப் பிக்குவுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

இப்படி ஆயிரமாயிரம் பாகுபாடுகளை, எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய தமிழ் மக்கள் நித்தமும் அனுபவித்துக் கொண்டிருகின்றார்கள். சிங்கள – பௌத்த சித்தாந்தத்தில் ஒழுகும் இலங்கையின் அரச திணைக்களங்கள் ஒவ்வொன்றாலும் பாகுபாடுகள் காட்டப்படுகின்றனதான். உலகின் இரட்டை நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பும் ஜனாதிபதி ரணில், தனது நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை முதலில் பார்க்கட்டும். உங்களைத் திருத்துங்கள். உலகம் தானாகத் திருந்தும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."

-ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)






# இஸ்ரேல் பிரதமர் போன்று செயற்படக்கூடாது ரணில்

## ராதாகிருஷ்ணன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, நவ.10

**இலங்கை என்பது ஜனநாயக நாடாகும். எனவே இஸ்ரேல் பிரதமர்போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படக்கூடாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தனம் உரையாற்றிய அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

பொலிஸ்மா அதிபர் ஒருவரைக்கூட நியமிக்க முடியாத வக்கற்ற நிலையிலேயே இந்த அரசு செயற்பட்டுவருகின்றது. பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள்மீது மென்மேலும் சுமைகள் திணிக்கப்படுகின்றன.

ஸ்தீரமற்ற ஆட்சியே உள்ளது. எனவே, அரச வளங்கள் விற்கப்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. குறிப்பாக 1894 இல் நுவரெலியாவில் நிர்மாணிக்கப்பட்ட தபால் நிலையத்தை விற்பனை செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது, இதனை நாம் எதிர்க்கின்றோம். ஒன்று தபால் நிலையம் விற்கப்பட வேண்டும், இல்லையேல் தபால்மா அதிபர் வீடு செல்ல வேண்டும் என ஜனாதிபதி எச்சரித்துள்ளார். இஸ்ரேல் பிரதமர்போல் செயற்பட ஜனாதிபதி முற்படக்கூடாது. இலங்கை ஜனநாயக நாடாகும். அதேவேளை 'நாம் 200' நிகழ்வில் தமிழக முதல்வரின் உரை ஒளிபரப்பப்படாமை தமிழர்களுக்கு அவமானமாகும் - என்றார். (எ-44)

# 62 துப்பாக்கிச் சூடுகளில் இதுவரை 32 பேர் சாவு!

கொழும்பு, நவ.10

நாட்டில் கடந்த ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 62 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமையில் கூடியது. பிரதமருடனான கேள்வி பதில் நேரத்தின் போது ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மேஜர் சுதர்சன் தெனிபிட்டிய எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் குழுக்களால் 62 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் 32 பேர் உயிரிழந்துள்ளனர். 37 பேர் காயம் அடைந்துள்ளனர் என்று பிரதமர் தெரிவித்தார். (எ-44)

**நாளை** 11.11.2023 சனிக்கிழமை ஐப்பசி 25

சுபநேரம் : 03.06 - 04.36
ராகுகாலம் : 09.06 - 10.36
நாகசதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2023 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைத்
தமிழ் மொழித்தினப் போட்டியில்
பிரிவு III ற்கான கட்டுரைப் போட்டியில்
தேசியரீதியில் முதலாமிடத்தைப் பெற்று
யா/ செங்குந்த இந்துக் கல்லூரிக்குப் பெருமை
தேடித்தந்த மாணவி

**செல்வி பரமகுருநாதன் ருஷானி**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமையடைகிறது. மாணவியின் இவ்வுயர்வுக்கு வழிப்படுத்திய ஆசிரியை திருமதி தனமூர்த்தி கணேஸ்வரி அவர்களையும், சகல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனதார வாழ்த்துவதோடு, மாணவியின் தொடர்ச்சியான வெற்றிகளுக்கு எல்லாம் வல்ல இறைவனின் ஆசிர்வாதங்களை வேண்டி நிற்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

## நினைவு வணக்க நிகழ்வு அழைப்பு

21.09.2023 வியாழக்கிழமை கனடாவில்
இறைபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம்



**அமரர்**
**கார்த்திகேசு நாகலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் நினைவு வணக்க நிகழ்வு நாளை (11.11.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
இல.111,D10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(cr.40935) (N.1)

## மணிவிழா வாழ்த்து



Congratulations

**திரு. பொன்னுச்சாமி இராசேந்திரா**
(SLTS - I)
சிரேஷ்ட ஆசிரியர் - சித்திரம்
யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

**சேவை விபரம்**

- 22.03.1990 - 21.03.1994
(ஆசிரியர் பயிற்சி - யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம்).
- 22.03.1994 - 02.01.2005
(ஆசிரியர் - யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம்).
- 03.01.2005 - 01.02.2015
(ஆசிரியர் - யா/ மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயம்).
- 02.02.2015 - 26.04.2018
(ஆசிரியர் - யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்).
- 27.04.2018 - 10.11.2023
(ஆசிரியர் - யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை).

எமது பாடசாலையில் கடந்த 05 வருடங்களிற்கு மேலாக சித்திரபாட ஆசிரியராக சேவையாற்றி இன்றுடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. பொ. இராசேந்திரா அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை.

(cr 40952) (Ak-1)

BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON

# BOC Travels (Pvt) Ltd
**(SUBSIDIARY OF BANK OF CEYLON)**

**இன்று 15 ஆவது அகவையில்**

# BOC Travels Jaffna Branch

இலங்கை வங்கியின் பிரயாண சேவை நிறுவனமானது கடந்த 14 வருடகாலமாக குறைந்த செலவு, வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் பொறுப்பு மிக்க உலகத் தரத்திலான வெளிநாட்டு பயண சேவைகளை வழங்கி வருகிறது.

**இத் தருணத்தில் அன்பும் பெறுமதிமிகு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரிற்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**எமது சேவைகள்**

- அனைத்து நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்கள்
- அனைத்து நாடுகளிற்குமான வீசா ஒழுங்குபடுத்தல்கள்
- அனைத்து நாடுகளிற்குமான பிரயாண காப்புறுதிகள்
- அனைத்து நாடுகளிற்குமான சுற்றுலா வசதிகள்
- தென்னிந்திய திருத்தல யாத்திரை ஒழுங்குகள்

**இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்**

**T.P.: 021 222 4575 / 021 222 4576**
**Whatsapp / Viber - 070 384 9335**
**070 395 1794**

முகவரி:
1ஆம் மாடி,
இலங்கை வங்கி மேற்தரக்கிளை,
ஆஸ்பத்திரி வீதி,
(வேம்படிச் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.

(CR.40959) (n.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670


## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் நீங்கும்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** கணவன்மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உறவினர்கள் மதிப்பார்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். நேர்மறை எண்ணம் பிறக்கும்.

**கன்னி:** இராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும்எடுத்துவைக்கமுடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

**துலாம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். அரசாங்க விஷயம் தாமதமாகும்.

**விருச்சிகம் :** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவது நல்லது. மனதுக்கு இதமான செய்தி வரும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும்.

**தனுசு:** எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

**மீனம்:** சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும்.

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர் தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.11.10 ஆம் திகதியில் இருந்து 2023.11.22 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்** அவர்களிடமிருந்து 2023.11.10 ஆம் திகதியிலிருந்து 2023.11.22 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும். 2023.11.23 ஆம் திகதி காலை 9.00 தொடக்கம் காலை 10.00 இக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.11.23 ஆம் திகதி பி.ப 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம். கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.11.17 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரஉகள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/01 | எல்லாலன் வீதி புனரமைப்பு கட்டம் -2 | 1.645 | 30 நாட்கள் | C8 அல்லது C9 ( வீதி நிர்மானம்) | 49 நாட்கள் | 17,000.00 | 08.02.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/02 | பாடசாலை வீதி கோப்பாய் மத்தி புனரமைப்பு | 1.95 | 30 நாட்கள் | C8 அல்லது C9 (வீதி நிர்மானம்) | 49 நாட்கள் | 20,000.00 | 08.02.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/03 | அச்சுவேலி பஸ் நிலைய உள்ளக வீதி மற்றும் வடிகால் அமைப்பு | 5.55 | 30 நாட்கள் | C7,C8 அல்லது C6 (வீதி நிர்மானம்) | 77 நாட்கள் | 55,000.00 | 07.03.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/04 | தலவாவோடை வீதி புனரமைத்தல் கட்டம் -2 | 0.59 | 30 நாட்கள் | C8 அல்லது C9 (வீதி நிர்மானம்) | 49 நாட்கள் | 6,000.00 | 08.02.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/05 | செல்வநாயகபுரம் வீதி கட்டம் 2 | 2.51 | 30 நாட்கள் | C7,C8 அல்லது C9 (வீதி நிர்மானம்) | 63 நாட்கள் | 26,000.00 | 22.02.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/06 | பழனியாண்டவர் கோவில் தெற்கு பக்க வீதி | 2.90 | 30 நாட்கள் | C7,C8 அல்லது C9 (வீதி நிர்மானம்) | 63 நாட்கள் | 30,000.00 | 22.02.2024 |
| NP/14/41(13)/2/Council/PVII/ 2023/07 | அண்ணாசனசமூக நிலைய முன் ஒழுங்கை, பாடசாலை ஒழுங்கை மற்றும் இந்திரானி வீதி 1ம் ம் 2ம் குறுக்கு வீதி மிகுதி வேலை | 1.956 | 30 நாட்கள் | C8 அல்லது C9 (வீதி நிர்மானம்) | 49 நாட்கள் | 20,000.00 | 08.02.2024 |

**தலைவர்,**

**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**

**புத்தூர்.**

**2023.11.10**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஏற்பாட்டில், 'போலித்தனத்திலிருந்து நிதர்சனத்துக்கு' எனும் தலைப்பிலான மாணவர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சினிமாவில் கட்டமைக்கப்படும் போலித்தனம், கற்பனாவாதம் மற்றும் சமூகச் சீர்கேடுகளிலிருந்து விலத்தி மாணவர்கள் தங்களுடைய இயல்பான தன்னுணர்வில் செயலாற்றவும், ஆரோக்கியமான, நிதர்சனமான, உளக் கட்டமைப்பைப் பேணுவதன் ஊடாகச் சமூக நோக்கும், மெய்மைத் தலைமைப் பண்பும் கொண்ட நற்பிரஜைகளாக மாணவர் சமூகத்தைக் கட்டமைத்துக் கொள்வதற்கான செயற்றிட்டமாக இந்தக் கருத்தரங்கு நிகழ்வு இடம்பெறும். (ம-66)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 10

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் துரைராசாவின் பிறந்த தினத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இணையவழியிலான அறிவியல் கலந்துரையாடலொன்று இன்று இடம்பெறவுள்ளது.

'துப்பறியும் சாம்புவும், செயற்கை நுண்ணறிவும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அதிதிப் பேச்சாளராக மொறட்டுவைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## மணிவிழா

யாழ்ப்பாணம், நவ. 10

மருத்துவ கலாநிதி வேலாயுதம் கமலநாதனின் மணிவிழா நெல்லை முருகன் ஆலய திருமண மண்டபத்தில், நாளை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

முன்னாள் கிராமஅலுவலர் தி.வரதராசன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. ஆசியுரைகளை அருட்சகோதரி சயந்தியும், ரங்கசாமிக் குருக்களும் வழங்கவுள்ளனர். நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து வாழ்த்துரைகளும், பணிநயப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (ம)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது!

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி – ஆனைவிழுந்தான் பகுதியில், இளைஞர் ஒருவர் கஞ்சாப் பொதிகளுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுத்துறையில் இருந்து இளைஞர் ஒருவர் கஞ்சாவைக் கடத்திச் செல்கின்றார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின் போதே மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 390 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. (ம-113)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி நடராசா குகனேஸ்வரி

08.11.2023 அன்று இறைபதமடைந்த எமது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி நடராசா குகனேஸ்வரி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CS 52801 (AK-1)

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்,
வட மாகாணம்.


## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 10

கொழும்புத்துறை மேற்கு பழனி யாண்டவர் கோயிலில் கந்தசஷ்டி உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சூரசங்காரம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## நீர்வேலி கந்தசுவாமி கந்தசஷ்டி உற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாறனை பூசையும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-17)


## யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்றம்
## பகிரங்க ஏலவிற்பனை

யாழ் மாநகரசபையின் பின்வரும் பொருட்களுக்கான பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் **2023.11.16 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு** மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்குபெறவிரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக **ரூபா 575.00** (வரியுடன்) இனை செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

1. பழைய இரும்புகள்
2. கழிவு ஓயில்
3. வெற்று தார் பரல்
4. விறகு

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(cr.40974) (N.1)



# INVITATION FOR BID (IFB)
## Provincial High Court
## Northern Province
## Jaffna
## Procurement of Cleaning and Sanitary Services – 2024

1. **The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders, **who have at least service station or branch in Jaffna District**, for the **service mentioned below in the schedule.**
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. Interested bidders may obtain further information from the **Procurement Unit, Provincial High Court, Jaffna** (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 a.m to 3.00 p.m from 10.11.2023**
   Contact numbers are
   Phone : 0212222582/0212226388
   Facsimile : 0212222582/0212226388
4. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the **Procurement Unit, Provincial High Court, Jaffna from 10.11.2023 to 29.11.2023 from, 9.00 a.m to 3.00 p.m** upon the payment of a non- refundable fee as described in the schedule below.
5. Sealed bids shall be sent by registered post addressed to the **The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna** or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court Jaffna on or before **30.11.2023 4.00 p.m.** Late bids will be rejected. Bidders should write the **service description** and **bid No.** on the top left hand corner of the envelope. Bids will be opened at **4.00 p.m. on the same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
6. Bid shall be valid for a period of **77 days from** the last date (**30.11.2023**) fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for **105 days** from the bid opening.
7. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
8. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/Serv. (Clean)/01/2023 | Cleaning Service for Courts Complex Jaffna | 4.0 | 25000/- | 14.03.2024 | 2000/- |
| 02 | HCJ/PROC/Serv. (Clean)/02/2023 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 3.5 | 25000/- | 14.03.2024 | 2000/- |
| 03 | HCJ/PROC/Serv. (Clean)/03/2023 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 3.0 | 25000/- | 14.03.2024 | 2000/- |
| 04 | HCJ/PROC/Serv. (Clean)/04/2023 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavakachchery | 3.0 | 25000/- | 14.03.2024 | 2000/- |
| 05 | HCJ/PROC/Serv. (Clean)/05/2023 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 3.0 | 25000/- | 14.03.2024 | 2000/- |
| 06 | HCJ/PROC/Serv. (Clean)/06/2023 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1.5 | 25000/- | 14.03.2024 | 2000/- |

9. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on **21.11.2023 at 9.00 a.m.**

The Chairman,
High Court Procurement Committee
Provincial High Court
Northern Province
Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17ஆம் ஆண்டு நினைவுகள்

இலங்கை தாய் மடியில்
1962 . 06 . 25

இலங்கை தாய் மண்ணில்
2006 . 11 . 10



## மாமனிதர்
# நடராஜா இரவிராஜ்
**(இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்)**

**V.T.நடராஜா வினும் விருட்சமாக வளர்ந்து நிற்கும் வீரகத்தியார் இராமலிங்கம் பரம்பரை வழிவந்த V.R.மங்கலேஸ்வரியினும் அன்பு உள்ளம் கொண்ட எங்கள் உலகறிந்த மாமனிதரின் நினைவுநாள் இன்று (2023.11.10)**

உலகறிந்த எங்கள் அன்பு உள்ளம் நிறைந்த மாமனிதரை அனைவரும் ஒன்று இணைந்து நினைவுகூருவோம்.
இனம், மதம், கட்சிகள் வேறுபாடு இன்றி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள மாமனிதரின் நினைவுத் தூபியில் கண்டி வீதி, சாவகச்சேரி.
நேரம்:- பிற்பகல் 2.00 மணி.

வீரகத்தியார் இராமலிங்கம் பரம்பரையினர்
இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.

(CS 26888)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்னாபிரிக்கா - ஆப்கான் அணிகளுக்கிடையிலான இன்றைய (10.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

தினம் ஒரு பரிசு 37

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்ட நாயகன் யார்?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்,
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

# இலங்கை தோல்வி பாகிஸ்தான் அவுட்

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் படுதோல்வியடைந்தது இலங்கை. இந்த வெற்றியையடுத்து நியூஸிலாந்து அணி ஏறக்குறைய அரையிறுதிக்குத் தகுதி பெறுவது உறுதியானது. இதேவேளை பாகிஸ்தான் வெளியேறுவதும் உறுதியாகியுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு, ஆரம்ப வீரர் பதும் நிஷங்க 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். குசல் மெண்டிஸ், சமரவிக்கிரம, சரித் அசலன்க மூவரும் முறையே 6, 1, 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர். குசல் பெரேரா ஒருமுனையில் அதிரடியாக ஆடி அரைச்சதத்தைப் பெற்றார். அவரும் 51 ஓட்டங்களைப் பெற்று வீழ்ந்தார். சீட்டுக் கட்டுப்போல் விக்கெட்டுக்கள் சரிய முடிவில் 171 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது இலங்கை. தீக்சன ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களைப் பெற்று ஆச்சரியப்படுத்தினார்.

பந்துவீச்சில் பேர்குசன், சான்நெர், ரச்சின் ரவீந்திரா மூவரும் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி எந்தப் பதற்றமும் இல்லாமல் ஆரம்பம் முதல் ஆடியது. சராசரியைத் தக்கவைத்துப் பெறப்படும் வெற்றியே நியூஸிலாந்துக்குத் தேவை என்பதால் விக்கெட் சரிவை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. 23.2 ஓவர்களில் இலக்கை எட்டி வெற்றிபெற்றது நியூஸிலாந்து. கொன்வே 45 ஓட்டங்களையும், டாரி மிச்செல் 43 ஓட்டங்களையும், ரச்சின் ரவீந்திரா 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

நியூஸிலாந்தின் இந்த வெற்றியையடுத்து பாகிஸ்தானின் அரையிறுதிக் கனவு கலைந்துள்ளது. இதையும் தாண்டி பாகிஸ்தான் அரையிறுதிக்குத் தகுதிபெற வேண்டுமாயின் அந்த அணி இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 275 ஓட்டங்களால் வெற்றிபெற வேண்டும் அல்லது இங்கிலாந்து நிர்ணயிக்கும் இலங்கை 2.3 ஓவர்களில் விரட்ட வேண்டும். (ம)

## உலகக்கிண்ண அரையிறுதிகள்

# இந்திய அணி விளையாடப்போகும் மைதானம் இறுதியாகாதது எதனால்?

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி விளையாடப்போகும் அரையிறுதி ஆட்டத்துக்கான மைதானம் இன்னமும் இறுதிப்படுத்தப்படாமை சர்ச்சையாகியுள்ளது.

பாகிஸ்தான் அரையிறுதிக்குத் தகுதி பெற்றால், அரையிறுதி ஆட்டத்தை மும்பையில் வைக்கக்கூடாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை வைத்தது. பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மும்பையில் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தான் எதிர்ப்பு மனோநிலை மும்பையில் தீவிரமாகியுள்ளதால் பாகிஸ்தான் வீரர்களுக்குப் பாதுகாப்பில்லை என்றே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதை இந்தியாவும் ஏற்றுக் கொண்டது. பாகிஸ்தான் இன்னமும் தொடரில் இருந்து வெளியேறவில்லை. அரையிறுதிக்குத் தகுதிபெற சாத்திமற்ற வாய்ப்புக்களைக் கொண்டிருந்தாலும் அந்த அணி வெளியேறிவிட்டதாக உத்தியோகபூர்வமாகக் கருத முடியாது. இதனால் இந்திய அணி முதலாவது அரையிறுதியில் ஆடப்போகும் மைதானம் இன்னமும் உறுதிப்படவில்லை. (ம)

இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா — ஆப்கான்

இடம் : அஹமதாபாத்
நேரம்: பி.ப. 2.00

SA CRICKET

தினம் ஒரு பரிசு — நாள் 35 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சி.யர்சிகன் | - தொல்புரம் | சி.சித்திராங்கி | - கொக்குவில் மேற்கு |
| பி.தமிழினி | - வல்வெட்டித்துறை | ஸ்ரீ.மயூலக்சன் | - திருநெல்வேலி |
| ஆர்.பிரியங்கராஜ் | - கோண்டாவில் | எவ்.ஹ.இப்ராஹிம் | - நானாட்டான் |
| ஜெ.பிரதீபா | - ஆனைக்கோட்டை | தே.தேனுபிரியா | - கூவில் (இளவாலை) |
| தே.யசோதரன் | - உடையார்கட்டு | பா.பாரத் | - மானிப்பாய் |
| சி.பிரகாஷ் | - சங்கானை | ஜே.ஜீவதர்ஷா | - இல்வாரை |
| கோ.மாலமாரகன | - ஊரெழு | க.கனிமொழி | - பூவரசன்குளம் |
| கி.குகதாஸ் | - வவுனியா | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 168 மருத்துவ...

வடக்கு, கிழக்கில் இந்த நிலைமை கூடுதல் அபாயம் மிக்கதாகக் காணப்படுகின்றது என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்ததாவது:-

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு மருத்துவர்கள் சேவையிலிருந்து விலகும் நிலைமை தற்போது நாட்டில் காணப்படுகிறது. விசேட மருத்துவ நிபுணர்கள் உட்பட சுமார் ஆயிரத்து 500 மருத்துவர்கள் ஒரு வருடம் என்ற குறுகிய காலத்துக்குள் சேவையிலிருந்து விலகியுள்ளனர். இது நாட்டிலுள்ள மொத்த மருத்துவர்களில் நூற்றுக்கு 5 சதவீதமாகும். அடுத்து நாம் எதிர்கொள்ளவுள்ள அபாயம் யாதெனில் மருத்துவர்களுக்கான சகல தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள 5 ஆயிரம் பேர் நாட்டைவிட்டு வெளியேறக் காத்திருக்கின்றனர். எனவே இவற்றைத் தடுப்பதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். ஒட்டுமொத்த மருத்துவக் கட்டமைப்பிலிருந்தும் 5 ஆயிரம் பேரை ஒரே சந்தர்ப்பத்தில் இழக்க நேரிட்டால் அது நூற்றுக்கு 25 சதவீத இழப்பாகும். ஒரே சந்தர்ப்பத்தில் மருத்துவக் கட்டமைப்பில் 25 சதவீத மனித வலுவை இழக்க நேரிட்டால், அதனை இலகுவில் ஈடு செய்யவோ, தாங்கிக்கொள்ளவோ முடியாது.

இந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் மதிப்பீடுகளை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய போர்க் காலத்தில்கூட இல்லாதவாறு மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. மயக்க மருந்து நிபுணர்கள் இன்மையால், அது தொடர்பான நிபுணத்துவமற்ற மருத்துவர்களே மயக்க மருந்துகளை வழங்கி, சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய அபாயநிலைமை ஏற்பட்டுள்ளது. மருத்துவர்கள் இல்லாமையால் நாடளாவிய ரீதியில் 20 மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம், நுவரெலியா மாவட்டங்களிலும் பெரும்பாலான மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன. போர்க் காலத்தில் காணப்பட்டதை விடவும் மோசமான நிலைமைக்கு மருத்துவக் கட்டமைப்பு சென்றுகொண்டிருக்கிறது. எனவே, ஆட்சியாளர்கள் இப்போதாவது முற்போக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் விரைவில் ஏற்கனவே மூடப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு மேலதிகமாக இனிவரும் காலங்களில் 168 மருத்துவமனைகள் மூடப்படக்கூடிய நிலை ஏற்படும் - என்றார். (அ-ம)

## மாணவர்களின்...

சுதந்திரம்' என்ற தலையங்கத்தில் உரையாற்ற இருந்தார். இந்தச் சட்டத்தரணி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை 'பாசிசவாதிகள்' என்று விளித்திருந்தார். இதனால், அவரின் விரிவுரைக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால், சட்டத்தரணி சுவஸ்திகாவின் விரிவுரை கைவிடப்பட்டது.

இந்த நிலையில், சட்டத்தரணியை மீண்டும் அழைத்து விரிவுரைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிக்கைக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் போராட்டத்தையும், புறக்கணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டதையடுத்து அறிக்கையைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம். (அ-ம-26-27)

## மூதாட்டியின்...

தப்பட்டுள்ளது. இந்தக் கொலை தொடர்பில் மூவர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி - அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது-89) என்ற மூதாட்டி கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி அவர் தங்கியிருந்த வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர்மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையை சட்ட மருத்துவ அதிகாரி பி.வாசுதேவா மேற்கொண்டார்.

மூதாட்டியின் இறப்புத் தொடர்பில் சந்தேகம் இருப்பதால், மாதிரிகள் பெறப்பட்டு அவை இரசாயனப் பகுப்பாய்வுக்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன. இந்த நிலையில், பகுப்பாய்வு அறிக்கையில் மூதாட்டி கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார், மூதாட்டியின் வீட்டில் தங்கியிருந்த 32 மற்றும் 28 வயதுடைய தம்பதிகளையும், 19 வயதுடைய வேலைக்கார யுவதியையும் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான 28 வயதான பெண், சுதந்திரக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபையில் முன்னாள் உறுப்பினராக இருந்தவரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100)

## பெண்ணொருவர்...

கிளிநொச்சி, பிரமந்தனாறுப் பகுதியில் கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மாத்தறை பகுதியைச் சேர்ந்த, இராஜசுலோஜனா என்ற பெண் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மோப்பநாயின் உதவியுடன் சந்தேகநபராக ஒருவரைக் கைதுசெய்தனர்.

இந்த வழக்கின் தீர்ப்பு கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீனால் வழங்கப்பட்டது. நீதிமன்றத்தில் அனைவரும் எழுந்து நிற்க, நீதிமன்றத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு அவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முதலாவது மரணதண்டனைத் தீர்ப்பு இதுவாகும். (அ-ம-113)

## நீதிபதிக்கு...

குற்றப்பிரேரணை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிரணி பிரதம கொறடாவும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்ன் கிரியல்ல.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

சிறிலங்கா கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் தொடர்பில் நீதிபதிகள் அறிந்திருக்கவேண்டும். சட்டவரைவுகள் தொடர்பில் போதிய தெளிவும் இருக்கவேண்டும்.

ஊழல் மிக்க சிறிலங்கா கிரிக்கட் நிறுவனத்தின் உறுப்பினர்களை அமைச்சர் நீக்கிய பின்னர் அவர்கள் நீதிமன்றத்தை (மேன்முறையீட்டு நீதிமன்றம்) நாடினர். இதன்போது அமைச்சரவை அழைத்து நீதிபதி (நீதியரசர்) விளக்கம் கேட்டிருக்க வேண்டும். தூய்மையான கரங்களுடன் தான் நீதிமன்றம் செல்லவேண்டும். ஆனால், அமைச்சரால் நீக்கப்பட்டவர்கள்தான் நீதிமன்றத்தை நாடினர். அமைச்சரை அழைத்து விசாரிக்காமல், அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக்குழுவுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் தவறு உள்ளது. இந்த இடைக்காலத் தடை உத்தரவின் பின்னர் லொறிகளில் பொருள்களை (கிரிக்கெட் சபையினர்) எடுத்துச்செல்கின்றனர். நிதி, ஆவணங்களை எடுத்துச்செல்லும் நிலையும் உருவாகியுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே புதிய இடைக்கால நிர்வாகக்குழுவை அமைச்சர் நியமித்தார். இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைபோதுமானது. நீதிமன்றத்திலும் சிற்சில தவறுகள் இடம்பெற்றுள்ளன. உறவுமுறை குறித்தும் புலப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை ஊழல்மிக்கது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, அவர்கள் நீதிமன்றத்தை நாடிய பின்னர், அமைச்சரவை அழைத்து விசாரித்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் எதற்காக அவசரம் காட்டப்பட்டது. எனவே, நீதிபதி வழங்கிய தீர்ப்பு தவறாகும். இன்று (நேற்று) நீதிபதி (நீதியரசர்) வழங்கியுள்ள தீர்ப்பு குற்றப் பிரேரணை கொண்டுவருவதற்கு அத்திபாரம் இட்டுள்ளது. இரு தரப்பினரும் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். நீதிபதிகளில் 99.9 வீதமானவர்கள் நேர்மையாகச் செயற்படக்கூடியவர்கள் என்பதையும் கூறியாக வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## ஐக்கிய...

ணைந்து முன்வைத்த பிரேரணை மீதான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே சஜித் இந்த அழைப்பை விடுத்தார்.

'ரொஷான் ரணசிங்க வியாபாரம்மூலம் நிதி பெறுபவர். அவர் திருடன் அல்லர் என்பது எனக்குத் தெரியும். அவர் எந்த அணியில் இருக்கின்றார் என்பது பிரச்சினை இல்லை. அவர் எமது பக்கம் இருப்பதை விரும்புகின்றேன். அவ்வாறானவர்களே எமக்குத் தேவை' - என்றார். (அ-ம-44)

## மயங்கி...

புனிதநகர், கற்கோவளத்தைச் சேர்ந்த கமலேஸ்வரி அமிர்தலிங்கம் (வயது-64) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நலன்புரித் திட்டப் பணத் தொகையைப் பெறுவதற்காகச் சென்றுகொண்டிருந்தபோது தும்பளை மணியகாரன் சந்திப்பகுதியில் அவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-100)

## கிரிக்கெட்...

வழிமொழிதலுடன் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்த இடைக்கால குழுவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்த நிலையில், அது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பை விடுத்து கிரிக்கெட் சபையின் பல்வேறு ஊழல்களை சபைக்கு வெளியிட்டார்.

இந்த நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சரின் இடைக்காலக் குழுவுக்கு முழு ஆதரவு தெரிவித்த எதிர்க்கட்சிகள் இது தொடர்பில் விவாதம் ஒன்றைக் கோரின. இதனையடுத்து இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை அனுமதிக்கும் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்கு ஆளும் கட்சியும் இணங்கியது.

விவாதத்தில் உரையாற்றிய ஆளும் மற்றும் எதிர்கட்சிகளின் உறுப்பினர்கள் சிறிலங்கா கிரிக்கெட் சபையின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் கௌரவமான முறையில் பதவிவிலக வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தினர். ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் உட்பட முக்கியமான தரப்பினருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க சபையில் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் இந்த விவாதத்தின்போது நீதிபதிகளின் பெயர் குறிப்பிட்டு ஒருசிலர் கருத்துகளை முன்வைத்தார்கள். நீதிமன்ற கட்டமைப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான செயற்பாட்டுக்கு கவலை தெரிவித்துக் கொள்கிறேன். நீதிமன்றத்தின் சுயாதீனத்தைப் பாதுகாக்க 225 உறுப்பினர்களும் பொறுப்புடன் செயற்படவேண்டும் என ஆளும் மற்றும் எதிர்த்தரப்பின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து பிரேரணை மீதான வாக்கெடுப்பு கோரப்படாத நிலையில் பிரேரணை ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (அ-ம-44)

## இலங்கை...

எரிசக்தி அமைச்சர் காஞ்சன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் பிரேரணைகளின் ஊடாக ஐ.சி.சி. இலங்கை கிரிக்கெட்டுக்கு தடை விதித்தால் அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகட்டும் தீபாவளி

யாழ்ப்பாணம், நவ. 10

தீபாவளியை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் புத்தாடைக் கொள்வனவில் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட நகரப் பகுதி, முனிஸ்வரா வீதியில் அங்காடிக்கடைத் தொகுதிகளில் புத்தாடைக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். மழையையும் பொருட்படுத்தாது மக்கள் புதிய ஆடைகளைக் கொள்வனவு செய்ததை காணமுடிந்தது. (ஒ-27)







'மாக்சிசமும் இலக்கியத் திறனாய்வும்' என்ற தலைப்பில் தமிழகப் பேராசிரியர் பா. ஆனந்தகுமாரின் விசேட உரையும் கலந்துரையாடலும் தேசிய கலை இலக்கியப் பேரவையில் அண்மையில் இடம்பெற்றன. (ச)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 'இஸ்ரேலின் ஆதிக்க இருப்பும் பலஸ்தீன மக்களின் உரிமையும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட உரை நிகழ்வு தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச)



# அமைச்சரவையிலிருந்து ரொஷானை நீக்குங்கள்

## ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 10

அமைச்சரவையில் இருந்து ரொஷான் ரணசிங்கவை நீக்குமாறு அமைச்சர்கள் சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறும் வகையிலும் மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலையை உருவாக்கும் நோக்கிலும் அவர் செயற்பட்டுவருவதாலும், அவரை தொடர்ந்து வைத்திருந்தால் அரசுக்கு நெருக்கடி ஏற்படும் எனவும் குறித்த அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், தற்போதையசூழ்நிலையில் ரொஷான் ரணசிங்கவை அமைச்சரவையில் இருந்து நீக்கினால் அது அவரை அரசியல் ரீதியில் புகழின் உச்சியில் அமர வைக்கும் எனவும், எதிரணிகள் அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடக்கூடும் எனவும்மேலும் சில அமைச்சர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும், இது தொடர்பில் ஜனாதிபதி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை எனத் தெரியவருகின்றது. (அ-ம-44)


## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 08 . 1957

இறப்பு 05 . 11 . 2023



**அந்தோனிப்பிள்ளை கிளபோடார்சியஸ் (யம்பிள்)**

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும் இல.3, அடம்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை கிளபோடார்சியஸ் கடந்த (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா செபமாலை தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், டல்சினி (UK), டெல்சியா (DO பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), துவாரகா, காலஞ்சென்ற டாளிங்சன், டெளிங்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லதா, குவாட்டஸ் (பிரான்ஸ்), றூபா (ஜேர்மன்), கொண்சலா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சம்மாட்டி மற்றும் ஏசு (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரவி (UK), முரளிதரன் (DO பிரதேச செயலகம், வேலணை), பாலேந்திரா (யாழ். மாநகர சபை) ஆகியோரின் மாமனாரும், டார்வின், டியானி (UK), றிஹானி, மெர்லினா, ஆரோன், போவாஸ், லேயா, சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (10.11.2023) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்திலிருந்து மாலை 3 .00 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 26861)A-1 தகவல்: மு.டெல்சியா - 077 614 7013



**வேலையாட்கள் தேவை**

அலுவலக உதவியாளர்கள் ஆண் / பெண் இருபாலாரும் தேவை.

075 910 6973

**வேலைவாய்ப்பு**

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 494 9683, 077 077 6469.

**பனம் பழம் தேவை**

30 ரூபா வீதம் பனம்பழம் உங்கள் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும். சேகரித்து தரக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 0777 111 999

**தேவை**

யாழ் நகரிலுள்ள சைவ உணவகமொன்றிற்கு வேலையாட்கள் தேவை

077 710 7247

**காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன**

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 3866 250

(CR 40948) A-1

**காணி விற்பனைக்கு**

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 623 4204 076 755 8606

(CS 26826) A-1




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.